செ.வெ.எண்.69 நாள்:26.04.2017

**பத்திரிக்கை செய்தி —— திருநெல்வேலி மாவட்டம்**

# திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் ” மா ” சாகுபடி கருத்தரங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். மா விவசாயிகளுக்கான மாம்பழ கண்காட்சியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு பரிசு கேடயம் வழங்கினார்.

**-----**

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி நன்னகரம் சமுதாயநலக் கூடத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிற்கள் துறையின் சார்பில் மா சாகுபடி கருத்தரங்கம் இன்று (26.04.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் மாம்பழம் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

மா சாகுபடி கண்காட்சியை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக தேசிய தோட்டக்கலை இயக்கம், பிரதம மந்திரி நீர் பாசனத் திட்டம், வேளாண் வளர்சித் திட்டம், பயிற் காப்பீட்டுத் திட்டம் உட்பட பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் கீழ் 2014 —— 2015 ம் ஆண்டில் 1868 விவசாயிகளுக்கு ரூ.471.69 லட்சமும், 2015 —— 2016 ம் ஆண்டில் 1914 விவசாயிகளுக்கு ரூ.335.78 லட்சம், 2016 —— 2017 ம் ஆண்டில் 5584 விவசாயிகளுக்கு ரூ.360.36 லட்சம் மதிப்பிலான உதவிகள் தோட்டக்கலைத்துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தென்காசி பகுதியில் கிணற்று பாசனம் அதிகமாகவுள்ளது. மேட்டுப் பகுதியாகவுள்ளதால் ”மா ” சாகுபடிக்கு ஏற்றதாகும் ஒரு வருடத்திற்கு ” மா ” இரண்டு முறை காய்கும் கோடையில் விலை குறைவாக இருந்தாலும், குளிர் காலத்தில் அதிக விலை கிடைக்கும். நிலங்களை அவசியம் உழவு செய்திட வேண்டும். உழவு செய்தால் தான் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும். சீமை கருவேல மரங்கள் வளர்ந்து நிலத்தை பாள்படுத்திடம் நமது கலாச்சாரம் மிக உயர்வானது விவசாயத்தையும், நமது மண்ணையும் தொடர்புடையது தான் நமது கலச்சாரம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 6078 எக்டரில் மாமரங்கள் பயிரிடப்பட்டு ஆண்டுக்கு சுமார் 37,000 டன் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மா அடர்வு முறையில் எக்டோருக்கு 400 மா ஒட்டுச் செடிகள் நடுவதால் இரண்டரை மடங்கு மகசூல் கிடைக்கும் இம் முறை நடவிற்கு எக்டருக்கு ரூ.9840 மனியமாக வழங்கப்படுகிறது. வயது முதிர்ந்த மா மரங்கள் உற்பத்தி திறனை மேம்படுத்திட மா புனரமைப்பு இனத்தின் கிழ் எக்டருக்கு ரூ.20,000 மானியம் வழங்கப்படுகிறது. மேலும் மா மரங்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் வழங்கப்படுகிறது. அரசின் திட்டங்களை பயன்படுத்தி அதிக அளவில் மா சாகுபடி செய்திட வேண்டும் மேலும் மா சாகுபடி குறித்து வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள் கூறும் நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து மாம்பழங்களின் உற்பத்தியை அதிகப்படுத்தி தங்களின் வருமானத்தை உயர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி (தோட்டக்கலை) தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் பாலமோகன், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி (தோட்டக்கலை)

தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் நயினார், பேராசிரியர் திரு.மணிசேகரன்,திரு.கண்ணன் ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றினர், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் திரு.வெங்கடேஷ், வேளாண்மை இணை இயக்குநர் திரு.கனகராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.கண்ணன், தென்காசி வட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி.ஜெயபாரதி மாலதி மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், மா விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.